நகராட்சி அலுவலகம்,

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி.

நாள் 06.03.2024

## அவசரக் கூட்டம்

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் எதிர்வரும் **2024**ம் வருடம் **மார்ச்** மாதம் 08 ம் தேதி **வெள்ளி கிழமை** காலை 10.30 மணியளவில் **நகர்மன்றத் தலைவர்** அவர்களின் தலைமையில் மன்றக் கூட்ட அரங்கில் வைத்து நடைபெறவிருக்கின்ற அவசரக் கூட்டத்திற்கான கூட்டப் பொருள்

**பொருள் எண்.1**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் அ11/2449/2022 நாள் 16.05.2023 படி, பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சி திட்டம் 2022-23 ன் கீழ், விக்கிரமசிங்கபுரம் நகராட்சி 2வது வார்டு பகுதிக்குட்பட்ட அய்யனார்குளத்தில் ரேஷன் கடை அமைக்கும் வகைக்கு பல்நோக்கு மையக்கட்டிடம் அமைத்தல் பணி மேற்கொள்ளும் பொருட்டு ரூ.6.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணி மேற்கொள்ள இடம் தேர்வு செய்யும் பொருட்டு, திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் கடந்த 23.01.2024 அன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அய்யனார்குளம் பகுதியில் உள்ள சர்வே புல எண் 437/1 ல் (தீர்வை ஏற்படாத தரிசு புறம்போக்கு ) நியாய விலைக்கடை அமைத்துக்கொள்ள இடம் தேர்வு செய்யப்பட்டு வருவாய் வட்டாச்சியர் அவர்களிடம் அறிக்கை கோரப்பட்டுள்ளது. அதன்படி அம்பாசமுத்திரம் வருவாய் வட்டாச்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண் ஆ1/2637/23 நாள் 06.02.24 ல் மேற்கண்ட சர்வே புல எண் 437/1 னை437/1 பி என உட்பிரிவு செய்து விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்கு முன் நுழைவு அனுமதி வழங்கும் பொருட்டு, நகராட்சி மூலம் தீர்மானம் நிறைவேற்றி தர கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி வார்டு எண் 2 அய்யனார்குளம் பகுதி சர்வே புல எண் 437/1ல் உள்ள விஸ்தீரனம் 13.02.00 ஹெக்டர் நிலத்தில் (தீர்வை ஏற்படாத தரிசு புறம்போக்கு ) 0.02.47 ஹெக்டர் நிலத்தினை 437/1 பி என உட்பிரிவு செய்து பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சி திட்டம் 2022-23 ன் கீழ் அய்யனார்குளம் பகுதியில் ரேஷன் கடை அமைக்கும் வகைக்கு பல்நோக்கு மையக்கட்டிடம் அமைத்தல் பணிக்கு பயன்படுத்திக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண். 2**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியின் 2024-25 ஆம் ஆண்டிற்க்கான உத்தேச நிதிநிலை அறிக்கை (வருவாய் மற்றும் மூல தன நிதி மற்றும் குடிநீர் நிதி) மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அங்கீகரித்து அனுமதி வழங்கலாம்.,

**பொருள் எண்.3**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் வார்டு எண் 1,10,13, மற்றும் 21 ஆகிய பகுதிகளில் சிதிலமடைந்த வாறுகால் மற்றும் சிறுபாலம் சரி செய்யும் பணி மேற்கொள்ள வேண்டி 09.02.2024 அன்று வரப்பெற்ற இரண்டு ஓப்பந்தப்புள்ளிகளின் ஓப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஓப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 1,10,13 மற்றும் 21 ஆகிய பகுதிகளில் சிதிலமடைந்த வாறுகால் மற்றும் சிறு பாலம் சரி செய்தல் மற்றும் தடுப்பு சுவர் அமைத்தல் பணி ந.க.எண் 2033/ 2023 /இ 1 | திரு. கே.ராஜா ஓப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 0.02% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | திரு. வெங்கட்பெருமாள் சுப்பையா ஓப்பந்தக்காரர் திருநெல்வேலி | 0.26% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஓப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஓப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஓப்பந்தக்காரர் திரு. கே.ராஜா ஓப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் என்பவரின் ஓப்பந்தப்புள்ளியை ஏற்று, மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதி க்லாம்

**பொருள் எண்.4**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் Untied 2023-24 நிதியின் கீழ் , இந்நகர் பகுதியில் சிதலமடைந்த சாலைகளை மேம்பாடு செய்யும் பணிகள் மேற்கொள்ள, திருநெல்வேலி நகராட்சிகள் நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்,5156/2023/B1நாள் 01.02.2024 ன் படி ரூ.102.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து பணி மேற்கொள்ள வேண்டி ஓப்பந்தப்புள்ளி அறிவிப்பினை, ஓப்பந்தவிதிமுறைகளின் படி மாவட்ட அளவிலான செய்தி தாள் மற்றும் மாவட்ட ஓப்பந்தப்புள்ளி மலரில் வெளியிட வேண்டி, திருநெல்வேலி மாவட்ட செய்தி மக்கள் தொடர்புதுறை அலுவலர் வழியாக, ஓப்பந்தப்புள்ளி அறிவிப்பினை, மதுரை மணி நாளிதழில், கடந்த 08.02.2024 அன்று வெளியிட்ட வகைக்கு வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.28244/- மட்டும் இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

ஓப்பந்த விதிமுறைகளின் படி, ஓப்பந்தப்புள்ளி அறிவிப்பினை, திருநெல்வேலி செய்திமக்கள் தொடர்புதுறை அலுவலர் அவர்களின் வெளியீட்டு ஆணை எண் 19/செ.ம.தொ.அ/திலி/2024 நாள் 07.02.2024ன் படி, வெளியிட்ட வகைக்கு, மதுரை மணி நாளிதழக்கு ரூ. 28244/- மட்டும் வழங்கவும், செலவினத்தை பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.5**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலக பயன் பாட்டில் உள்ள கணினிகள் மற்றும் அதற்கான பிரின்டர்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை மற்றும் பராமரிப்பு பணிகளை, அலுவலக பணி பாதிப்படையாமல் இருக்கும் பொருட்டு உடனுக்குடன் சரிசெய்ய வேண்டி,ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டி, உள்ளூர் விலைப்புள்ளி பெற்று அதற்கான மதிப்பீட்டினை இந்நகராட்சி பணி மேற்பார்வையாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 1.35 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டியும், பணி மேற்கொள்ள வேண்டியும் , இதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

அலுவலக பயன்பாட்டின் அவசியம் மற்றும் அவசரம் கருதி, கணினிகளின் ஆண்டு பராமரிப்பு பணிக்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 1.35 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம் மற்றும் அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.6**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதி பாபநாச கோவில் முன்புறம், சந்தனமாரியம்மன் கோவில் அருகே மற்றும் மூன்று விளக்கு பேரூந்து நிலையம் அருகே உள்ள உயர்கோபுர மின் விளக்குகள் பழுதடைந்து, பயன்பாட்டில் இல்லாமல் உள்ளதை , பொது மக்களின் நலன் கருதி பழுதுகளை உடன் சரி செய்ய வேண்டி, இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.2.42 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திட வேண்டியும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பொதுமக்களின் நலன் கருதியும் பணியின் அவசியம் கருதியும், மேற்கண்ட 3 இடங்களில் உள்ள பழுதடைந்த உயர் கோபுரமின் விளக்குகளை உடன் சரிசெ ய்யும் பொருட்டு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 2.42 இலட்சத்திற்கும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.7**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதி இராமலிங்கபுரம் நுன்னுயிர் குடிலில் உள்ள குப்பைகளை அரைக்கும் இயந்திரம் (sherding machine) பழுதடைந்து, குப்பைகளை அரைக்க இயலாத நிலையில் உள்ளது. மேற்கண்ட இயந்திரத்தை பழுது நீக்கம் செய்ய இயலாத நிலையில், பணியின் அவசியம் கருதி, மேற்கண்ட நுன்னுயிர் குடிலுக்கு புதியதாக குப்பைகளை அரைக்கும் இயந்திரம் (sherding machine) 1 எண்ணம் வாங்க இந்நகராட்சி பணி மேற்பார்வையாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 348100/-க்கு மன்ற அனுமதி வேண்டியும், பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திட வேண்டியும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பொது சுகாதார பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி இராமலிங்கபுரம் நுன்னுயிர் குடிலுக்கு புதியதாக குப்பைகளை அரைக்கும் இயந்திரம் (sherding machine) 1 எண்ணம் கொள்முதல் செய்யவும் , அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்,

**பொருள் எண்.8**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி கட்டபொம்மன் காலணி உரக்கிடங்கு பகுதியில், விலங்கு பிறப்பு கட்டுப்பாடு மையம் (Animal Birth Controll Centre) அமைக்கும் பணி மேற்கொள்ள இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண் 319 நாள் 31.08.2023 ன் படி, ரூ. 19.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெற்று பணி கள் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட கட்டுப்பாட்டு மையத்தில் சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் இருந்து வரப்பெற்ற அறிவுரையின் படி, கூடுதலாக கழிப்பிடம் , ஸ்டோர் ரூம் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு இந்நகராட்சி பணி மேற்பார்வையாளர் அவர்ளால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 5.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டியும், பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திட வேண்டியும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தின் நேரடி அறிவுரை மற்றும் வரப்பெற்ற வடிவமைப்பின் படி, விலங்கு பிறப்பு கட்டுப்பாடு மையம் (Animal Birth Controll Centre) ல் கூடுதல் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 5.00 இலட்சத்திற்கும் , செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்,

**<u>பொருள் எண்.9</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதி வார்டு எண் 11 ல் எரிகல் பாறை நடுத்தெருவில் உள்ள சின்டெக்ஸ் தொட்டியில் உள்ள போர் பழுதடைந்து தண்ணீர் இல்லாத நிலையில் உள்ளது. மேற்கண்ட சின்டெக்ஸ் தொட்டிக்கு புதியதாக ஆழ்துளாய் கிணறு அமைத்து, பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், மற்றும் வார்டு எண் 19 மீனாட்சிபுரம் வாய்கால் அருகே மற்றும் வார்டு எண் 10 ஆம்பூர் மெயின்ரோடு பகுதியில் உள்ள சிதிலமடைந்த நிலையில் உள்ள சின்டெக்ஸ் தொட்டிக்கான பம்ப்ரூமினை சரியசெய்யவும் இந்நகராட்சி பணி மேற்பார்வையாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 2.75 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

குடிநீர் அவசியம் மற்றும் அவசரம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், மேற்கண்ட வார்டு எண் 11 மற்றும் 19 உள்ள சின்டெக்ஸ் தொட்டியில் பழுது நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 2.75 இலட்சத்திற்கும், பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி .குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.,

**<u>பொருள் எண்.10</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதி 21 வாடுகளிலும் உள்ள சிறுமின் விசைத் சின்டெக்ஸ் தொட்டிகள் பலவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. மேற்கண்ட சிதிலமடைந்த மற்றும் பழுதடைந்த நிலையில் உள்ள அனைத்து சின்டெக்ஸ் ம தொட்டிகள், அதற்கான பம்புகள் மற்றும் இதர மேம்பாடு பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சி பணி மேற்பார்வையாளர்அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ. 5.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டியும், செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

குடிநீர் அவசியம் மற்றும் அவசரம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 5.00 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி .குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.,

**<u>பொருள் எண்.11</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 2 அய்யனார்குளம் பகுதிக்கு நாளது தேதி வரை கிராமபுற மின்னோட்டம் மூலம் மின்சாரம் பெறப்பட்டு வருகிறது. இதனால் அப்பகுதியில் அடிக்கடி மின்சாரம் துண்டிக்கப்படுவதோடு, மீண்டும் மின்சாரம் பெற வெகுநேரம் ஆகிறது. இதனால் அப்பகுதி பொதுமக்கள், பள்ளிகுழந்தைகள் மற்றும் முதியோர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். மேற்கண்ட அய்யனார்குளம் பகுதி இந்நகராட்சி எல்கைக்குள் அமையப்பெற்றுள்ளதாலும், இந்நகர்பகுதியில் உள்ள அனைத்து இடங்களுக்கும் நகர்ப்புற மின்னோட்டம் பெறப்பட்டுள்ள நிலையில், மேற்கண்ட பகுதியில் மட்டும் கிராமபுற மின்னோட்டத்தில் செயல்பட்டு வருவதால், அப்பகுதி பொது மக்களின் நலன் கருதி கிராமபுற மின்னோட்டத்தில் இருந்து நகர்ப்புற மின்னோட்டமாக மாற்றம் செய்ய வேண்டி, உதவி மின்பொறியாளர்

விநியோகம் துனை மின் நிலையம் விக்கிரமசிங்கபுரம் அவர்களின் கடிதம் நாள் 22.02.2024 ன் படி, கேட்புத் தொகையாக ரூ. 875450/- மட்டும் செலுத்த கேட்டுகொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகையினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

அய்யனார்குளம் பகுதி பொதுமக்களின் நலன் கருதி, அப்பகுதியில் செயல்பட்டு வரும் கிராமபுற மின்னோட்டத்தினை மாற்றி நகர்ப்புற மின்னோட்டம் பெற வரப்பெற்ற மதிப்பீட்டு கேட்புத் தொகை ரூ. 875450/- மட்டும் பொது நிதியில் இருந்து செலுத்த மன்றத்தின் பரிசீலனைக்கும் அனுமதிக்கும்.

**பொருள் எண். 12**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொதிகையடி தூய நீரேற்று நிலைய வளாகத்திற்குள் அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் புதியதாக குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகள் மேற்கொள்வதற்கு இடையூராக உள்ள தென்னை மரம் 27, நெட்டுலிங்கமரம் 25, தேக்கு மரம் 24, பனை மரம் 1 ஆகியவற்றை வெட்டி அகற்ற வேண்டி, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட பசுமைக்குழு தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள் மூ.மு.கே2/4671/2023 நாள் 16.02.2024 ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட மரங்களுக்கு அம்பாசமுத்திரம் துணை இயக்குநர்/வன உயிரினக்காப்பாளர் புலிகள் காப்பகம் அவர்களிடமிருந்து நியாய விலைப்பட்டியலாக ரூ. 2,05,776 எனப்பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் விக்கிரமசிங்கபுரம் நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஏல அறிவிப்பு நாள் 22.02.2024 ன் படி, பொது ஏல அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டு, 29.02.2024 அன்று பொது ஏலம் விடப்பட்டுள்ளது. பொது ஏலம் விடப்பட்டத்தில் ஏலத்தில் கலந்துக்கொண்ட திரு.கே.இரஜா ஓப்பந்தக்காரர், விக்கிரமசிங்கபுரம் அவர்களால், சர்கார் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 2,05,776 /- ஐ விட கூடுதல் ஏலத் தொகையாக ரூ.2,20,000/- கேட்டுள்ளார், எனவே ஓப்பந்தக்காரர் திரு.கே.,இராஜா என்பவருக்கு மேற்கண்ட மரங்களை வெட்டி அகற்றி கொண்டு அனுமதி ஆணை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பொதிகையடி தூய நீரேற்று நிலையவளாகத்திற்குள் உள்ள 77 மரங்களை வெட்டி அகற்ற வேண்டி சர்கார் நிரணயம் செய்யப்பட்டுள்ள தொகையை விட கூடுதல் ஏலத் தொகை கேட்டுக்கொண்டுள்ள திரு. கே.இராஜா ஓப்பந்தக்காரருக்கு அனுமதி வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண். 13**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொதிகையடி தூய நீரேற்று நிலைய வளாகத்திற்குள் அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் புதியதாக குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இடங்களில் இருந்து, அகற்றப்பட்ட மண் மற்றும் கற்களை அகற்ற வேண்டி, விக்கிரமசிங்கபுரம் நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஏல அறிவிப்பு நாள் 22.02.2024 ன் படி, பொது ஏல அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டு, 29.02.2024 அன்று பொது ஏலம் விடப்பட்டுள்ளது. பொது ஏலம் விடப்பட்டத்தில் ஏலத்தில் கலந்துக்கொண்ட திரு.கே.இரஜா ஓப்பந்தக்காரர், விக்கிரமசிங்கபுரம் அவர்களால், சர்கார் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 5000 /- ஐ விட கூடுதல் ஏலத் தொகையாக ரூ.7200/- கேட்டுள்ளார், எனவே ஓப்பந்தக்காரர் திரு.கே.,இராஜா என்பவருக்கு மேற்கண்ட பழைய மண் மற்றும் கற்களை அகற்ற அனுமதி ஆணை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பொதிகையடி தூய நீரேற்று நிலையவளாகத்திற்குள் பழைய மண் மற்றும் கற்களை அகற்ற வேண்டி சர்கார் நிரணயம் செய்யப்பட்டுள்ள தொகையை விட கூடுதல் ஏலத் தொகை கேட்டுக்கொண்டுள்ள திரு. கே.இராஜா ஓப்பந்தக்காரருக்கு அனுமதி வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**பொருள் எண்.14**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொதிகையடி தூய நீரேற்று நிலைய வளாகத்திற்குள் அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் புதியதாக குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகள் மேற்கொள்வதற்கு இடையூராக உள்ள தென்னை மரம் 27, நெட்டுலிங்கமரம் 25, தேக்கு மரம் 24, பனை மரம் 1 ஆகியவற்றை வெட்டி அகற்ற வேண்டி,பொது ஏல அறிவிப்பினை, ஏல விதிமுறைகளின் படி, மாவட்ட அளவிலான செய்தி தாளில் விளம்பரம் செய்ய வேண்டி, திருநெல்வேலி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறை அலுவலர் மூலம் வெளியீட்டு ஆணை எண் 26/2024 ன் படி, தினமணி நாளிதழில் 23.02.2024 அன்று வெளியிட்ட வகைக்கு வரப்பெற்ற பட்டியல் கேட்புத் தொகை ரூ.20916/- மட்டும் மேற்கண்ட நாளிதழக்கு வழங்கவும்,செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக்குறிப்பு**

ஏல விதிமுறைகளின் படி, ஏல அறிவிப்பினை திருநெல்வேலி மாவட்ட செய்தி மக்கள் தொடர்ப்பு துறை அலுவலர் வழியாக விளம் பரம் செய்யப்பட்ட வகைக்கு வரப்பெற்ற கேட்புத் தொகை ரூ. 20916/- மட்டும் தினமணி நாளிதழக்கு வழங்கவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.15**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் அரசாணை நிலை எண் 159 நாள் 08,11,2022 ன்படி, அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகள் மேற்கொள்ள ரூ. 29.51 கோடி மதிப்பீட்டில் அனுமதி பெறப்பட்டு நகர்ப்பகுதிகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட திட்ட மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ள குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணி மேற்கொள்ளும் போது, சுமார் 46.00 கி.மீ தூரத்திற்கு கடினபாறைகள் உள்ளதல் மேற்கண்ட பகுதிகளில் குடிநீர் பகிர்மான குழாய் பதிக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.மேற்கண்ட கடினப்பாறைகளை மனித சக்தி மூலம் தகர்க்க இயலாத காரணத்தினால், கடின பாறைகளை தகர்க்கும் பொருட்டு வெடிப்பொருட்களை கொண்டு (Control Blasting) பாறைகளை தகர்த்து குடிநீர் குழாய் பதிக்கும் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதற்கான அனுமதியும் திருநெல்வேலி மாவட்ட வருவாய்அலுவலர் மற்றும் கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவரின் செயல்முறை உத்திரவு மூ.மு.ஈ4/7527/2023 நாள் 15.02.2024 ன் படி பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ. 29.51 கோடியில் கடினப்பாறைகளை வெடிவைத்து தகர்க்க அகக்கூடிய செலவினம் வழிவகை செய்யப்படவில்லை. மேலும் மேற்கண்ட மதிப்பீட்டில் இந்நகர் பகுதியில் பதிக்கப்படும் குடிநீர் குழாய்களுக்கானதண்ணீர் நிரப்பி நீர் அழுத்த ஆய்வு (HYDRO Testing for Transmission main, Feeder main and Distribution System) மேற்கொள்ளும்பொருட்டு ஆகக்கூடிய செலவினம் மற்றும் தொழில்நுட்ப ரீதியாக தேவைப்படும் DI Special. வால்வுகள் மற்றும் இதரப்பொருட்கள், ஆகியவையும் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படவில்லை என்பதால், மேற்கண்ட பணிகள் அனைத்தும்மேற்கொள்ளும் பொருட்டு,இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் கூடுதல் மதிப்பீடு ரூ. 8.50 கோடிக்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீடு மற்றும் திட்டக்கருத்துருவினை சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநருக்கு அனுப்பி வைக்கவும், மதிப்பீட்டு தொகை ரூ. 8.50 கோடிக்கு திருத்திய நிர்வாக அனுமதி பெறவும், அதற்கான தொகையினை அம்ரூட் 2.0 திட்டம் மானயம் அல்லது அரசின்ஏதேனும் ஒரு திட்டத்தின் கீழ் நிதி ஓதுக்கி தர வேண்டி சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகளை முழுமையாக முடித்து இயக்குதல் மற்றும் பராமரிப்பிற்கு கொண்டு வரப்பட வேண்டும் என்பதின் அடிப்படையில், ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டில்

விடுப்பட்டுள்ள இனங்களை சேர்க்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாக உள்ளதாலும், திருத்திய நிரவாக அனுமதி வேண்டி சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு திட்டக்கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம். மேலும் இந்நகராட்சியில் பொது நிதியில் போதுமான அளவு இருப்பு இல்லை என்பதாலும், ஏற்கனவே இந்நகராட்சியின் மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ. 2.50 கோடி நிலுவையில் உள்ளதாலும், SUIDF திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள பணிகளான தெருவிளக்குகளை எல்இடி மின்விளக்குளாக மாற்றம் செய்யும் பணிக்கு ரூ.191.99 இலட்சம் கடனாக பெறப்பட்டு திரும்ப செலுத்தப்பட வேண்டிய நிலையில், பொது மக்களின் நலன் கருதி, குடிநீர் திட்டத்தின் அவசியம் கருதியும் இத்திட்டத்திற்கான கூடுதல் செலவினத் தொகை ரூ. 8.50 கோடியினை அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் அல்லது அரசின் ஏதேனும் ஒரு திட்டத்தின் கீழ் முமு மான்யமாக பெற வேண்டியும் சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநருக்கு திட்டக்கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.16**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் புதிய குடிநீர் இணைப்புகள் வழங்கும்போது தெருவிலுள்ள சாலைகளை தோண்டும் நேர்வில் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சாலை பராமரிப்பு கட்டணம் தொகையினை சென்னை நகராட்சிகள் நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 748/08/குவ2 நாள் 21.09.2009 ல் ஆண்டு தோறும் 5 % உயர்த்த அறிவுரை வழங்கி உள்ளார்கள்.எனவே ஏற்கனவே உள்ள 2023-24 ம் ஆண்டிற்கான சாலை பராமரிப்பு கட்டண தொகையில் 5 % உயர்த்தி 2024-25 ஆண்டிற்கு உயர்த்தி வசூல் செய்திட மன்றத்திள் அனுமதிக்கு

| நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணம் | கருங்கல் சாலை ரூ | தார்சாலை ரூ | சிமெண்ட்சாலை / பேவர்பிளாக் சாலை ரூ |
|---|---|---|---|
| 0 முதல் 30 மீட்டர் நீளத்திற்கு 2023–24 | 2085 | 4460 | 5154 |
| உயர்த்தப்பட்ட கட்டணம் 2024–25 | 2189 | 4683 | 5412 |
| 30 முதல் 90 மீட்டர் நீளத்திற்கு 2023–24 | 3270 | 5646 | 6333 |
| உயர்த்தப்பட்ட கட்டணம் 2024–25 | 3434 | 5928 | 6650 |

**அலுவலகக்குறிப்பு**

சென்னை நகராட்சிகள் நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின் படி, சாலை பராமரிப்பு கட்டணம் 01.04.2024 முதல் உயர்த்தி வசூல் செய்திட மன்றம் அனுமதி வழங்கலாம்

**நகர்மன்றத் தலைவர்**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி

This document was created with the Win2PDF “Print to PDF” printer available at

https://www.win2pdf.com

This version of Win2PDF 10 is for evaluation and non-commercial use only.
Visit https://www.win2pdf.com/trial/ for a 30 day trial license.

This page will not be added after purchasing Win2PDF.

https://www.win2pdf.com/purchase/